சுற்றுநிருபம் : **02/2012**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்
2012.03.14

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள்
வட மாகாணம்

**கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட படி செலுத்துதல்**

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 18/2010 இலக்க 22.04.2010ம் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் தற்போது வாழ்க்கைச் செலவுப்படியாக ரூபா. 5250/= செலுத்தப்பட்டு வருகின்றது. அதன்பின் அரச ஊழியர்களுக்கு 01.01.2011 இல் இருந்தும், 01.01.2012 இல் இருந்தும் செலுத்தப்பட்டு வரும் படிகளை கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கமைய வழங்குவதற்கு வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இவ் விசேட படிகளுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு சங்கங்களுக்கு நிதி வல்லமை இருப்பதுடன், அது தொடர்பாக சங்கங்களின் இயக்குநர் சபை திருப்தியடையும் அதேவேளை கிராமிய வங்கியில் பெறப்படும் இலாபத்தினைத் தவிர்த்து சங்கம் சுய முயற்சியால் இலாபம் ஈட்டுமாயின் அப்படிகளை கீழ்க்கண்டவாறு அம்மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டு வழங்க முடியும்.

1. ஆணைக்குழுச் சுற்றுநிருபம் 18/2010 ற்கமைய ரூ5250/- இனையும், ரூ 600/- இனையும் சேர்த்து ரூ 5850/- இனை 01.01.2011 ந் திகதியிலிருந்து வழங்கப்படல் வேண்டும். தற்காலிக அமைய ஊழியர்களுக்கு நாளொன்றிற்கு 195/- படி மாதம் ரூ 5850/- இற்கு மேற்படாதவாறு வழங்கப்படல் வேண்டும்.

2. அத்துடன் 01.01.2011 இலிருந்து கடமையாற்றும் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் அவர்களின் படிகள் அல்லாத சம்பளத்தின் 5% இனை விசேட படியாக வழங்கப்படுதல் வேண்டும். அதேபோன்று தற்காலிக அமைய அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் அவர்களின் நாளாந்த சம்பளத்தின் 5% இனை விசேட படியாக வழங்கப்படுதல் வேண்டும்.

3. 01.01.2012 இலிருந்து (01.01.2011 இலிருந்து 5% உட்பட) கடமையாற்றும் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் அவர்களின் படிகள் அடங்காத சம்பளத்தின் 15% இனை விசேட படியாக வழங்கப்படுதல் வேண்டும். அதேபோன்று தற்காலிக அமைய அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் அவர்களின் நாளாந்த சம்பளத்தின் 15% இனை விசேட படியாக வழங்கப்படுதல் வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கான பங்களிப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை என்பன கணிப்பீடு செய்யும் போது இவ் விசேட படிகள் அவற்றுள் உட்படுதல் ஆகாது.

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இவ் விசேட படிகள் உரித்துடையதல்ல.

மேற்குறிப்பிடப்பட்ட விசேட படிகளை கணிப்பீடு செய்யும் போது பிழையாகக் கணிப்பீடு செய்தமையால் அல்லது ஊழியர் தற்போது பெறும் படிகள் தவிர்ந்த அடிப்படைச் சம்பளம் பிழையாக உள்ளமையால் கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு பணத்தையும் அவ்வூழியருடைய சம்பளத்திலிருந்து ஒரு தடவையிலோ அல்லது பகுதி பகுதியாகவோ பின்னர் அறவிடப்படுதல் வேண்டும். அவ்வாறு மீள அறவிடப்படும் பணம் ஊழியரது சம்பளத்தின் 40% வரையறைக்கு உரியதல்ல.

இவ் விசேட படிகள் கொடுப்பனவு சம்பந்தமாக சங்கத்தின் இயக்குநர் சபையால் எடுக்கப்படும் தீர்மானம் 25.04.2012ம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு அறியத்தரப்படல் வேண்டும்.

இச்சுற்றுநிருபம் வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது.

2012.03.08ந் திகதிய ஆணைக்குழு ஆணைப்படி,

Ms.K.PRABHA
Secretary
Co-operative Employees Comm
Northern Province

க.பிரபா
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

பிரதி :

01. செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, கொழும்பு.
02. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
03. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
04. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்.